155—

சென்னை மாநகரில் கம்பிவடத் தொலைக்காட்சி (கேபிள் டி.வி.) அனுமதித்தல்.

*** 10711** — திரு. மா. சுந்தரதாஸ்:*

மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை மாநகரில் கம்பிவடத் தொலைக்காட்சிப் (கேபிள் டி.வி.) படங்கள் காட்டுவதற்கு உரிமங்கள் வழங்கப்பட்டு வருகின்றனவா?

(ஆ) அதன் விவரங்கள் யாவை?

(இ) எந்த நிபந்தனைகளின் பேரில் இந்த உரிமங்கள் வழங்கப்பட்டு வருகின்றன?

மாண்புமிகு திரு. மு. தென்னவன், செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) 30-1-1-1993 முடிய பெறப்பட்ட மனுக்களின் எண்ணிக்கை 884. குறைபாடுகளுக்காக திருப்பி அனுப்பப்பட்ட மனுக்கள் 280. நிராகரிக்கப் பட்ட மனுக்கள் 89. உரிமம் மறுக்கப்பட்ட மனுக்கள் 26. விசாரணையில் நிலுவையிலுள்ள மனுக்கள் 54. உரிமம் வழங்கப்பட்ட மனுக்கள் 435. உரிமம் வழங்கப்பட்டதன் மூலம் வசூலிக்கப்பட்ட உரிமைக் கட்டணம் 4 லட்சத்து 89 ஆயிரம் ரூபாய்.

(இ) நடைமுறையில் உள்ள தமிழ்நாடு வீடியோ விதிகளின்படி உரிமங்கள் வழங்கப்படுகின்றன. இதுகுறித்த விவர அறிக்கை அவையின்முன் வைக்கப்பட்டுள்ளது

விவர அறிக்கை.

உரிமம் வழங்கும் படிவம் `P'-ன்படி கீழ்க்கண்ட நிபந்தனைகள் விதிக்கப்பட்டுள்ளன:-

கேபிள் டி.வி. நடத்தவதற்கான உரிமம், 1984-ஆம் ஆண்டு தமிழ்நாடு வீடியோ கேசட் ரிக்கார்டர்கள் மற்றும் கேபிள் டி.வி. அமைப்புக் கோவைகள் மூலமாகத் தொலைக்காட்சி திரையில் திரைப்படங்கள் காட்டுதல் (முறைப்படுத்துதல்) சட்டத்தின்கீழ் இயற்றப்பட்ட விதிகளுக்கு உட்பட்டு கீழ்க்கண்ட நிபந்தனைகளுடன் வழங்கப்படுகிறது: -

(1) இந்த உரிமமானது வேறு ஒரு சட்டத்தின் கீழ் அல்லது அதன் கீழ் இயற்றப்பட்ட விதிகள் அல்லது துணை விதிகள் கீழ் தேவைப்படும் அல்லது வேறு வகையில் இணங்கி நடப்பதற்காக யாதொரு உரிமத்தைப் பெறுவதினின்று உரிமதாரர் அல்லது அவருடைய பணியாளர்கள் அல்லது முகவர்களுக்கு விதிவிலக் களிக்காது.

(2) உரிமம் வழங்கும் அலுவலர் அல்லது அவரால் உரிய முறையில் அதிகாரமளிக்கப்பட்ட சார்நிலை அலுவலர்கள் அல்லது ஒழுங்கை நிலைநிறுத்தப் பணிக்கப்பட்ட யாதொரு காவல் துறை அலுவலர், உரிமத்தின் நிபந்தனைகள் நிறைவேற்றப் பட்டுள்ளனவா என்பதை சரிபார்ப்பதற்காக மேற்சொன்ன வளாகங்களுக்குள் எந்த நேரத்திலும் எளிதாகச் சென்று சோதனைகள் மேற்கொள்ளலாம்.

(3) உரிமதாரர், தன்னிடமுள்ள ஒவ்வொரு திரைப்படத்தைப் பொறுத்தமட்டில், ஆய்வாளர் பதவித்தரத்திற்குக் குறையாத காவல்துறை அலுவலர் அல்லது வருவாய்த்துறையைச் சேர்ந்த வட்டாட்சியர் கோரும்போது, 1957 ஆம் ஆண்டு பதிப்புரிமைச் சட்டத்தின் (மத்திய சட்டம் 14/1957) 17 ஆம் பிரிவின்கீழ் திரைப்படத்தின் பதிப்புரிமையின் முதல் உரிமையாளரிட மிருந்தும், மேற்சொன்ன சட்டத்தின் 18 ஆம் பிரிவின் கீழ் அத்தகைய பதிப்புரிமை ஒப்படைக்கப்பட்டுள்ள நேர்வில் அத்தகைய பதிப்புரிமை ஒப்படைக்கப்பட்டவரிடமிருந்தும் பெற்றுள்ள இசைவுக் கடிதத்தை அளிக்க வேண்டும்.

(4) உரிமதாரர், 1952 ஆம் ஆண்டு திரைப்படவியல் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 37/1952) 3 ஆம் பிரிவின்கீழ் அமைக்கப்பட்ட அதிகாரமன்றத்தால் பொதுமக்களுக்குக் காண்பிப்பதற்கு தகுதி யானது என்று சான்றளித்த திரைப்படத்தைத் தவிர வேறு திரைப்படத்தை வைத்திருக்கக்கூடாது. இத்திரைப்படம் காட்டப் படும்போது அதில் அதிகாரமன்றத்தின் வரையறுக்கப்பட்ட முத்திரை இருக்க வேண்டும் என்பதோடு அத்தகைய முத்திரை அதில் பதிக்கப்பட்டிருப்பதால், அத்திரைப்படத்தை மாற்றவோ, கள்ளத்தனமாகத் திருத்தவோ கூடாது.

(5) ஆபாசமான, இழிவான காட்சிகள் காட்டப்படக்கூடாது.

(6) ஒவ்வொரு கேபிள் டி.வி. அமைப்பின் மூலம், அவ்வமைப்பு இயங்கும் இடத்திலிருந்து 100 இணைப்புகளுக்கு மேல் கொடுக்கப் படக்கூடாது.

(7) பூமிக்கடியில் கம்பி வட இணைப்பு அளிப்பது கூடாது.

(8) இந்நிபந்தனைகள் கட்டுப்பாடுகள் அல்லது உரிமத்தின் பின்பக்கத்தில் குறிப்பிடப்பட்ட தனி நிபந்தனைகள் ஏதாவது

மீறப்பட்டால் உரிமம் முழுவதும் ரத்து செய்யப்படுவதற்கோ அல்லது தற்காலிகமாக ரத்து செய்யப்படுவதற்கோ உட்பட்டதாகும்.

(9) உரிமதாரர், முந்தைய மாதத்தில் காட்டப்பட்ட திரைப்படங்களின் பட்டியலை வைத்து வரவேண்டும்.

திரு. மா. சுந்தரதாஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேபிள் டி.வி., சன் டி.வி., போன்ற டி.வி. நிகழ்ச்சிகளில் வெஸ்டர்ன் ஸ்டைலில் நடனங்கள் மற்றும் நிகழ்ச்சிகளை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். ஆகையினால் இளைஞர்கள் நம்முடைய டி.வி. நிகழ்ச்சிகளைப் பார்க்காமல் இந்த சன்.டி.வி, கேபிள் டி.வி. நிகழ்ச்சிகளைப் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். இதனால் நம்முடைய கலாச்சாரத்தையே மாற்றி விடுகின்ற நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அதனால் இதை காலையிலும் மாலையிலுமாவது மாற்றுவதற்கு அரசு ஆணையிடுமா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 11.05

மாண்புமிகு திரு. மு. தென்னவன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேட்கப்பட்ட கேள்வி கேபிள் டி.வி.யில் படங்கள் காட்டுவதற்கு உரிமங்கள் வழங்கப்படுமா என்பது பற்றி. எனவே அதற்கு பதில் சொல்லியிருக்கிறேன். அவர் கேட்ட கேள்வி பற்றி பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. மா. சுந்தரதாஸ் : இங்கே கொடுத்திருக்கிற விவர அறிக்கையில் இத்தனை எண்ணிக்கை என்று கொடுக்கப்பட்டிருக்கிறது. இதனால் எவ்வளவு பணம் கிடைத்திருக்கிறது என்பதைத் தெரிவிக்க ஆவன செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. தென்னவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உரிமம் வழங்கப்பட்ட மனுக்கள் 435. உரிமம் வழங்கப்பட்டதன் மூலம் 4 லட்சத்து 89 ஆயிரம் ரூபாய் உரிமக்கட்டணமாக வசூலிக்கப்பட்டது என்பதையும் ஏற்கெனவே தெரிவித்திருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 156, திரு. இரா. புதுநயினார் ஆதித்தன், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

156—

சேரன்மகாதேவி தொகுதியில் உயர்நிலைப் பள்ளிகளுக்கு கட்டிடங்கள் கட்டுதல்.

*** 12861**—திரு. இரா. புதுநயினார் ஆதித்தன்:

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—